மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 219/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்ன இருசான் | நாள் | 11.08.2023 |
| தகப்பனார் பெயர் | சுருட்டையன் (எ) பூவரசக்கவுண்டர் | | |

**4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1) எனக்கு படிக்க தெரியுமா என்றால், தமிழ் எழுத்து கூட்டிப் படிப்பேன். என் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு நன்கு தெரியும். என் பிரமாண பத்திரிக்கையில் 3-வது பத்தியில் மாணிக்கம் என நான் குறிப்பிட்டுள்ளது யார் என்றால், என்னுடைய மூத்த சகோதரர்.

2) என் பிரமாண பத்திரிக்கையில் என் தந்தை சுருட்டையன் (எ) பூவரசக்கவுண்டர் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரில் ஒரு சொத்தை கிரயம் செய்து வைத்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரில் அளித்ததாக சொல்லப்படும் கிரய ஆவணத்தின் சான்று நகல் எதையேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என சொல்ல இயலுமா என்றால், தேதி, மாதம், வருடம் எனக்கு சரியாக நினைவில்லை.

3) மேற்படி பத்திரத்தில் எந்த சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால், சுமார் 40 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் அவை குறித்து எனக்கு சரியாக நினைவில்லை. நான் சொல்வது போல் அவ்வாறு என் தகப்பனார் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரில் எந்த கிரயப்பத்திரமும் எழுதி வைக்கவில்லை என்றால், சரியல்ல.

4) மேற்படி கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால், ஆம். இவ்வழக்கில் 4ம் பிரதிவாதியாக வெள்ளையம்மாள் என்பவரை சேர்த்துள்ளேன் என்றால், சரிதான். என் பிரமாண பத்திரிக்கையில் என் தந்தை சின்னமுத்துவின் குடும்பத்தாரை பாதுகாத்திட வேண்டி நேரடியாக சொத்தை வாங்கி 4ம் பிரதிவாதி வெள்ளையம்மாள்

பெயரில் கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 4ம் பிரதிவாதி பெயரில் எந்த தேதியில் சொத்து கிரயம் செய்யப்பட்டது என்றோ, யாரிடமிருந்து மேற்படி சொத்து கிரயம் பெறப்பட்டது என்றோ, மேற்படி விவரங்களை நான் என் வழக்குரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

5) மேற்படி சொத்து எவ்வளவு விலைக்கு கிரயம் வாங்கப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால், சுமார் ரூ.11000/–ற்கு கிரயம் வாங்கப்பட்டது. மேற்படி 4ம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்தின் சர்வே எண் மற்றும் பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி விவரங்களை நான் என் வழக்குரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

6) என் தகப்பனார், என் மகன் கோவிந்தராஜின் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளதாக நான் என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. என் வழக்குரையிலோ, என் பிரமாண பத்திரிக்கையிலோ அவ்வாறு உயில் எழுதியதாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறானது என்றால், என் வழக்கறிஞரிடம் நான் சொல்லியிருப்பேன். ஆனால் எனக்கு சரியாக நினைவில்லை. என் மகனின் பெயரில் உயில் எழுதப்பட்ட விவரம் எனக்கு முன்பே தெரியுமா என்றால், என் தந்தை இறந்த பின்பு தான் தெரியும். மேற்படி உயில் பதிவு செய்யப்பட்ட உயிலா என்றால், ஆம்.

7) மேற்படி உயிலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் எந்த சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் பட்டா எண், அதன் விஸ்தீரணம், அதன் சர்வே எண் குறித்து எனக்கு தெரியுமா என்றால், நினைவில்லை.

8) 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரில் கிரயம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால், சுமார் 20, 22 வயது இருக்கும். என் தந்தை, 4ம் பிரதிவாதி வெள்ளையம்மாள் பெயருக்கு நேரடிக் கிரயம் கொடுத்த சமயத்தில், எனக்கு என்ன வயது இருக்கும் என்றால், அப்போதும் எனக்கு

சுமார் 20, 22 வயது இருக்கும். ஒன்றிரண்டு வயதுகள் முன் பின் இருக்கலாம். அப்போது என் தம்பி சின்னமுத்துவிற்கு அப்போது சுமார் 13 வயது இருக்கும்.

9) நான் சொல்வது போல் என் தந்தை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயாருக்கு எந்த சொத்தையும் கிரயம் கொடுக்கவில்லை என்றாலும், 4 ம் பிரதிவாதிக்கு எந்த சொத்தையும் நேரடியாக கிரயம் கொடுக்கவில்லை என்றாலும், என் மகனுக்கு எந்த சொத்தையும் உயில் எழுதி வைக்கவில்லை என்றாலும், அவ்வாறு சொத்துக்களை கிரயம் மற்றும் உயில் வழியாக கொடுத்ததாக நான் சொல்வது தவறானது என்றாலும், இவ்வழக்கிலுள்ள முழுமையான சொத்துக்களை மறைக்கவே அவ்வாறு நான் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

10) மேற்படி ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யாதிலிருந்தே இவ்வழக்கில் முழுமையான சொத்துக்களை நான் மறைக்கவே அவ்வாறு தாக்கல் செய்யாமல் உள்ளேன் என்பது தெளிவாகிறது என்றால், சரியல்ல. என் வழக்கறிஞரிடம் ஆவணங்களை அளித்துள்ளேன். என் தந்தைக்கு சொந்தமான மொத்த சொத்தையும் இவ்வழக்கில் நான் காண்பிக்கவில்லை என்பதால், என் வழக்கு மேற்படி காரணத்திற்காகவே தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்றால், சரியல்ல. நான் அனைத்து சொத்துக்களையும் காண்பித்துள்ளேன்.

(4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.